பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 18 சனிக்கிழமை 02.07.2022 கதிர் 130

## வருடாந்தம் 12,000 பேர் விபத்துக்களால் சாவு!

இலங்கையில் விபத்துக்களால் வருடாந்தம் 12 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் பெரும்பாலானோர் வீதி விபத்துக்களால் உயிரிழக்கின்றனர் என்று போக்குவரத்து, கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

2

# கந்தக்காடு கலவரம்; 4 படையினர் கைது!

### தொடர்கின்றது விசாரணை




பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுவினருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் கைதி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் இராணுத்தினர் இருவரும், விமானப்படை அலுவலர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற கலவரத்தில் கொழும்பு - மோதரையைச்

2

## கோட்டாபய உடனடியாக பதவி விலக வேண்டும்!

### டிலான் எம்.பி. அழுத்தம்



நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்த தாவது:-

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தோல்வி அடைந்துவிட்டார். தன்னால் முடியாது என்பதைப் பிரதர் மஹிந்த ராஜபக்ஷவும்

2

# யாழ். - தமிழகத்துக்கான விமான சேவை தாமதம்!

### எரிபொருள் நெருக்கடி நிலைமையும் காரணமாம்




**யாழ்., பலாலி சர்வதேச விமான நிலையத்தின் சேவைகளை மீள ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.**

**இந்த விமான நிலையத்தில் இருந்து தமிழகத்துக்கான விமான சேவைகள் ஜூலை முதலாம் திகதி (நேற்று) முதல் மீள ஆரம்பிக்கப்படும் என்று கடந்த மாதத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.**

**எனினும், இலங்கையில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலைமையைக் கருத்தில்கொண்டும், அந்த விமான சேவைகளை மீள ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.**

2

## குளவி கொட்டி குடும்பஸ்தர் சாவு மலையகத்தில் தொடரும் சோகம்

### மூவர் வைத்தியசாலையில் சிகிச்சை



பொகவந்தலாவை மேல் பிரிவு தோட்டப் பகுதியில் உள்ள 17ஆம் இலக்க வனப்பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற 4 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்கானதில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் மேலும் மூன்று பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது எனப் பொகவந்தலாவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ கீழ்ப் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 50 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான

2

## பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்களுக்கு எச்சரிக்கை



பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்கள் உடனடியாகப் பணிக்கு சமூகமளிக்காது போனால் அவர்களைச் சேவையில் இருந்து விலகியவர்களாகக் கருதி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொழிற்சங்கங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளதாகவும் ஊடகங்களிடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாள்களில் மாத்திரம் நாடு முழுவதும் தபால் நிலையங்கள்

2

## 4 கோடி ரூபா பெறுமதியான தங்கங்களுடன் ஒருவர் கைது

### டுபாயில் இருந்து வந்தவரே சிக்கினார்



சட்டவிரோதமான முறையில் 4 கோடி 70 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கப்பாளங்களைக் கொண்டுவந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் இருந்து விமானத்தில் வந்த குறித்த நபரிடமிருந்து 16 தங்கப்பாளங்களும்,

2

## இரு பிள்ளைகளுடன் வாவியில் குதித்து தற்கொலை செய்த தாய் எழுதிய கடிதம்

### வீட்டில் சோதனை மேற்கொண்ட பொலிஸாரிடம் சிக்கியது



தனது இரண்டு பிள்ளைகளுடன் எம்பிலிப்பிட்டிய சந்திரிகா வாவியில் நேற்றுக் குதித்து தற்கொலை செய்து கொண்ட தாய் எழுதிய கடிதம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவரதுவீட்டில்சோதனை செய்த பொலிஸ் அதிகாரிகளுக்குக் குறித்த கடிதம் கிடைத்தது.

குறித்த பெண் சில காலமாக மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் எனவும், மருந்தை உட்கொள்வதற்கு உடலுக்கு மிகவும் சிரமமாக இருந்ததால்

2

### வீடுகளில் எரிபொருள் பதுக்கல்;

## கிளிநொச்சியில் ஒருவர் மாட்டினார்



கிளிநாச்சி நகரப் பகுதியில் சட்ட விரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2

## குளவி கொட்டி குடும்பஸ்தர் சாவு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கன்பத்மநாதன்என்பவரேஉயிரிழந்துள்ளார்.

சடலம் பொகவந்தலாவை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

காயங்களுக்குள்ளான மூவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பணிப்புறக்கணிப்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் உப தபால் நிலையங்களைத் திறப்பதற்கு அண்மையில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 26ஆம் திகதி முதல் தபால் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கின.

இதன் காரணமாக, மத்திய தபால் பரிவர்த்தனை மற்றும் வெளிநாட்டுத் துறைகளில் கணிசமான அளவு தபால் பைகள் குவிந்துள்ளன.

## கிளிநொச்சியில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி - கரடிப்போக்கு சந்திக்கு அண்மித்த பகுதியில் வீடுகளுக்குள் சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 800 லீற்றர் டீசல், 950 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டன. இதனைப் பதுக்கி வைத்திருந்தார் என்றசந்தேகத்தின்பேரில்பொலிஸாரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டதுடன் சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

## இரு பிள்ளைகளுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தார் எனவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

32 வயதான தாய் தனது 5 வயது மகள் மற்றும் 11 வயது மகனுடன் சந்திரிகா வாவியில் நேற்று குதித்திருந்தார்.

சம்பவத்தில் தாயும், மகளும் உயிரிழந்துள்ளதுடன், 11 வயது மகன் உயிர் பிழைத்தார்.

உயிரிழந்த பெண்ணிடம் இருந்து 2 ஆயிரம்ரூபாபணம்மற்றும்கையடக்கத் தொலைபேசி என்பன கைப்பற்றப்பட்டன.

சுரங்கிகா மதுமாலி என்ற 32 வயதுடைய தாய் நேற்றுப் பகல் தனது இரண்டு குழந்தைகளுடன் சந்திரிகா வாவியில் குதித்துள்ள நிலையில் 11 வயதுடைய சாம் துஷ்மந்த நீந்திக் என்ற மகன் கரைக்குவந்துஉதவிகோரிசத்தமிட்டார்.

அதன்படி பிரதேசவாசிகள் மற்றும் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் உயிர்காப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு வந்து தாயைக் காப்பாற்ற முயற்சித்தனர்.

தாய் மற்றும் 5 வயதுடைய மகள் நெதும் நெத்மால் ஆகிய இருவரும் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் 5 வயது மகள் மதியம் 1.45 மணியளவில் உயிரிழந்திருந்தார்.

எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வந்த தாய் நேற்று மாலை உயிரிழந்திருந்தார்.

## 4 கோடி ரூபா பெறுமதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2 ஆயிரத்து 98 கிராம் எடையுள்ள 4 உருகிய தங்கத் துண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன என்று சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கொழும்பு - தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சுங்கப் பிரிவினர் அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் சுதத் சில்வா தெரிவித்துள்ளார்.

## கந்தக்காடு கலவரம்; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த 36 வயதுடைய கைதி ஒருவர் உயிரிழந்தமையுடன், மறுநாள் புதன்கிழமை அதிகாலை அங்கிருந்து 726 கைதிகள் தப்பியோடியிருந்தனர்.

இந்நிலையில், இதுவரை 667 கைதிகள் மீளவும் கைதுசெய்யப்பட்டமையுடன், 59 பேர் தொடர்ந்தும் தேடப்பட்டு வருகின்றனர்.

கந்தக்காடு கலவரம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் தீவிர விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும் களத்தில் இறங்கி விசாரணையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோட்டாபய உடனடியாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரூபித்துவிட்டார். எனவே, இதனை விளையாட்டாகக் கருதக்கூடாது.

ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலகி, சர்வகட்சி இடைக்கால அரசை அமைப்பதற்கு இடமளிக்க வேண்டும் - என்றார்.

## வருடாந்தம் 12,000 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், வயோதிபர்கள் பலர் கீழே விழுவதனூடாக விபத்துக்களுக்குள்ளாகின்றனர் என்று சுகாதார அமைச்சின் இளைஞர், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் பிரிவின் பிரதான விசேட வைத்திய நிபுணர் ஷிரோமி மதுவகே கூறியுள்ளார்.

## யாழ். - தமிழகத்துக்கான ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பலாலி சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டுநவம்பர்11ஆம்திகதிஆரம்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்து தமிழகத்துக்கான விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மீண்டும் 2020ஆம் ஆண்டு டிசெம்பர்மாதம்முதல்அந்தச் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், தற்போது அந்த விமான சேவைகளை மீள ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் அந்தச் சேவைகளை ஆரம்பிக்க அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், எரிபொருள் பிரச்சினை மற்றும் இந்தியத் தரப்பில் விமானங்களை ஒழுங்குபடுத்துவதில் சட்டச் சிக்கல்கள் காரணமாக அந்த நடவடிக்கைகளைப் பிற்போட நேர்ந்துள்ளன என்று கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622

# பிரச்சினையைத் தீர்க்கச் சென்ற இளைஞர் வெட்டிப் படுகொலை!

அயல் வீட்டில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையைத் தீர்க்கச்சென்ற இளைஞர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காலி, நெலுவ பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் 20 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பலத்த காயங்களுக்குள்ளான அவர், மெதகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக உடுகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அடக்கத்துக்கு முன் முடக்கம்

**தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் – குறிப்பாக எரிபொருள் இன்மையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளினால் –முழு நாடும் முடங்கும் பேராபத்து ஏற்பட்டு இருக்கின்றது.**

**கொரோனாப் பேரிடர் காலத்தில் முழு நாடும் பல தடவைகள் முடக்கப்பட்டன. மக்கள் தாமாகவே வீடுகளுக்குள் முடங்கி கிடக்க வேண்டி நேர்ந்தது.**

**ஆனால், அந்தப் பேரிடர் முடக்கத்துக்கும், இப்போது நாட்டினது கையை மீறி, அரசினதும் மக்களினதும் கட்டுப்பாட்டை மீறி, அரச நிர்வாகத்தின் இயலாமை காரணமாக கட்டாயமாக நாடே முடங்கப் போகும் நிலைமைக்கும் வேறுபாடுகள் அதிகம் உண்டு.**

**அந்தக் கொரோனாத் தொற்றுப் பேரிடரை எதிர்கொள்வதற்காக முழு நாடும் முடக்கப்பட்ட போது நாட்டின் சகல நிர்வாகக் கட்டமைப்புகளும் இயங்கக்கூடிய முழு ஆயத்த நிலையில் இருந்தன. மக்கள் ஒன்று கூடுவதும், சமூக நெருக்கமும் தொற்றுப் பரவலை ஊக்குவிக்கும் என்பதால் அவற்றைச் சமாளிப்பதற்காக நாடு தன்னைத்தானே முடக்கிக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.**

**அந்தச் சமயத்தில் சுகாதார சேவை உட்பட சகல அத்தியாவசிய சேவைகளும் மக்களுக்கு அவசரப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய ஆயத்தத்திலும் முழு உஷார் நிலையிலும் இருந்தன. அத்தியாவசிய பொருள் விநியோகம் கூட ஓரளவுக்கு தங்குதடையின்றி முன்னெடுக்கப்படக்கூடிய நிலைமை இருந்தது.**

**ஆனால் இன்றைய சூழல் அப்படி அல்ல. நிலைமை கட்டு மீறி விட்டது. எல்லை தாண்டிப் போய் உள்ளது. அவசர சிகிச்சைக்கு அம்புலன்ஸ் கூட ஓட முடியாத நிலைமை. எரிபொருள் கையிருப்பு முற்றாக வறண்டு விட்டது.**

**அதன் தொடர் விளைவாக நேரப் போகும் அவலம் இன்னும் மோசமானதாக இருக்கும்.**

**ஏற்கனவே கெட்டுச் சீரழிந்து போய் இருக்கும் அந்நிய செலாவணி வருமானத்தை இத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஓரளவுக்கு தூக்கி நிறுத்தி இருந்தவை ஏற்றுமதி உற்பத்திகளான ஆடை தொழிற்சாலைகள், கடல் உணவு ஏற்றுமதி, தேயிலை ஏற்றுமதி போன்றவை.**

**எரிபொருள் தட்டுப்பாட்டால் இந்த துறைகளும் ஒரேடியாக படுக்கப் போகின்றன. ஆடை தொழிற்சாலைகள், கடல் உணவு ஏற்றுமதி நிறுவனங்கள் எல்லாம் இந்த முடக்கத்தோடு அடங்கும் நிலைமை.**

**கொரோனா முடக்கத்துக்கு மத்தியில் அந்தத் தொழில்கள் நடந்து கொண்டிருந்தன. கொஞ்ச நஞ்ச அந்நிய செலாவணி வருமானத்தையாவது அவை ஈட்டி தந்து கொண்டிருந்தன. அவை எல்லாமே இப்போது ஒரேடியாகப் படுக்க போகின்றன.**

**எரிபொருளும் இல்லை, அந்நிய செலாவணி வருமானமும் அடியோடு இல்லை என்றால் கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் தகர்ந்து போகும் நிலைமைதான்.**

**போக்குவரத்தும் கணிசமாக முடங்கி விட்டது. மாகாணங்களுக்கு இடையிலான ஊடாட்டம் செயலிழக்கப் போகின்றது. வைத்தியசாலைகள், சுகாதார சேவைகள் இழுத்து மூடப்படும் கட்டம். பாடசாலைகளும் செயலிழக்கும் கட்டம்.**

**இந்த முடக்கம் மீளெழுச்சிக்கான நம்பிக்கையைத் தரும் முடக்கமல்ல. நிரந்தர அடக்கத்துக்கு முன்னான முடக்கம் போலவே மனதைப் பதற வைக்கின்றது. நாட்டை முழுமையாக அடங்க வைத்த பின்னர்தான் கோட்டா கோமகன் அதிகாரத்தை விட்டு இறங்குவார் போல.**

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெறல் வேண்டும்!

### ஜகத் குமார வலியுறுத்து



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெற வேண்டும் அல்லது பொதுத்தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளோம் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் ஒருசில தவறான தீர்மானங்களால் நாட்டு மக்கள் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கேள்விக்குள்ளாக்கப்பட்டது.

அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் கடந்த மே மாதம் 9 ஆம் திகதி காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது முன்னெடுக்கப்பட்ட தாக்குதல் பாரதூரமான விளைவை ஏற்படுத்தியது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினார்கள்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள எந்தப் பிரச்சினைகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இதுவரை தீர்வு பெற்றுக் கொடுக்கவில்லை.

நெருக்கடிகள் நாளாந்தம் தீவிரமடைகின்றனவே தவிர குறைவடையவில்லை. நெருக்கடிகளின் பேச்சாளரை போல் பிரதமர் செயற்படுகிறார்.

பொதுஜன பெரமுனவின் பிரதமர் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதை பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி தலைமையில் கடந்த மாதம் இடம்பெற்ற குழு கூட்டத்தின் போது வலியுறுத்தினார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நியமனம் தொடர்பில் ஜனாதிபதி பல்வேறு விடயங்களை தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும் அல்லது பொதுத்தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளோம்.

எரிபொருள் பிரச்சினை தீவிரமடைய செய்யப் பட்டு அதனூடாக தேசிய இருப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. – என்றார்.

## காலிகோட்டையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கையின் எந்த சட்டத்தை மீறினர்?

### கனடா தூதுவர் கேள்வி



டெஸ்ட்போட்டியின் போது காலிகோட்டையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அகற்றுவதற்கு இராணு வத்தைப் பயன்படுத்தியமை தொடர்பாக இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்கினன் டுவிட்டர் பதிவொன்றில் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

கிரிக்கெட் இலங்கையில் மிகப்பெரிய விடயம் என்பது எனக்குத் தெரியும். இராணுவத்தினரை பயன்படுத்தவேண்டிய அளவிற்கு இது தேசிய பாதுகாப்பு விடயமா என தூதுவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த இவர்கள் எந்த சட்டத்தை மீறினார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## சைக்கிள், அதன் உதிரிப்பாக கொள்வனவுகள் அதிகரிப்பு!

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக சைக்கிள் மற்றும் அதன் உதிரிப்பாக கொள்வனவு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்காக, நாட்டின் பல பாகங்களிலும் உள்ள சைக்கிள் விற்பனை நிலையங்களை மக்கள் அதிகளவில் நாடிச்செல்கின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

மக்கள் சைக்கிள் கொள்வனவு செய்வது அதிகரித்துள்ள நிலையில், அதன் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

தற்போதுவரை சாதாரண சைக்கிள் ஒன்றின் விலை, 50 ஆயிரம் ரூபாவைக் கடந்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன், புதிய வடிவிலான மற்றும் வெவ்வேறு தொழில்நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்ட சைக்கிள், ஒரு லட்சம் ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

## நாட்டில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியால் பெண்கள் பலர் பாலியல் தொழிலுக்கு மாறும் ஆபத்து!

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக சமூக ரீதியான பிரச்சினைகள் உருவாகக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக பெண்களில் பலரும் பாலியல் தொழிலாளிகளாக மாறக் கூடிய ஆபத்து இருப்பதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் சிறப்பு மருத்துவ நிபுணர் ரசாஞ்சலி ஹெட்டியராச்சி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதனால், பாதுகாப்பற்ற பாலியல் செயற்பாடுகளில் இருந்து விலகி இருக்குமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அறிமுகமாகாத நபர்களுடன் பாதுகாப்பின்றி பாலியல் ரீதியான செயற்பாடுகளில் ஈடுபடும் போது பெண்கள் பாலியல் சம்பந்தப்பட்ட பல நோய் தொற்றுக்கு உள்ளாக கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி பெண்கள் பலருக்கு நோய் தொற்றை ஏற்படுத்தக் கூடிய நோய் காவிகளாக மாறக்கூடும் எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

# ஈரானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்; 5 பேர் சாவு



ஈரானின் ஹார்மோஸ்கான் மாகாணத்தில் உள்ள துறைமுக நகரமான பந்தர் அப்பாஸின் தென்மேற்கில் 100 கிலோ மீற்றர் தொலைவில் இன்று அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6ஆக பதிவாகி உள்ளது. இதனால், வீடுகள், கட்டடங்கள் குலுங்கியதில் மக்கள் அதிர்ச்சியடைந்து வீடுகளைவிட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். மேலும், கட்டடங்கள் இடிந்து சேதமடைந்துள்ளன. இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சயே கோஷ் என்ற கிராமத்தைச் சேர்ந்த ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். ஈரானில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து நில அதிர்வுகள் ஏற்பட்டு வருகிறது. இன்று அதிகாலை 5.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்ட ஒரு நிமிடத்தில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டு 6ஆக பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மேலும் 82 கோடி டொலர் உக்ரைனுக்கு அமெ.உதவி



ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் நடைபெற்ற நேட்டோ உச்சி மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கலந்து கொண்டார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், தேவைப்படும் வரை மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவு அளிக்கும். ரஷ்யா இந்தப் போரில் வெற்றி பெறாது என தெரிவித்தார். இந்நிலையில், உக்ரைனுக்கு மேலும் 82 கோடி டொலர் நிதியுதவி வழங்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது. இதில் ஏவுகணை எதிர்ப்பு ரொக்கெட்டுகள், பீரங்கி ரொக்கெட்டுகள் மற்றும் பிற ஆயுதங்கள் ஆகியவையும் உள்ளடங்கி உள்ளன.




# கழிவு நீரில் இருந்து தயாரிக்கப்பட்ட சிங்கப்பூர் பீர்; மதுபிரியர்கள் வரவேற்பு

சிங்கப்பூரில் கழிவுநீரில் இருந்து மறுசுழற்சி செய்யப்படும் நீரில் இருந்து பீர் தயாரிக்கப்பட்டு, 'நியூப்ரூ' என்ற பெயரில் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. கழிவு நீர் முதலில் சிங்கப்பூர் குடிநீர் விநியோக சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பம்ப் செய்யப்பட்டு அதன்பின், வடிகட்டப்பட்ட சுத்தமான நீர் ஆகும். இவ்வாறு மறுசுழற்சி செய்யப்படும் குடிநீரின் பிராண்ட் நியூவாட்டர் எனப்படுகிறது. இந்த குடிநீரை பீர் தயாரிப்புக்கு பயன்படுத்துகின்றனர்.

சிங்கப்பூரில் தேசிய நீர் நிறுவனத்துடன் இணைந்து உள்ளூர் மதுபான நிறுவனமான ப்ரூவர்க்ஸ் இந்த சிறப்பு பீரை அறிமுகப்படுத்தியுள்ளது.

கழிவு நீரில் இருந்து தயாரிக்கப்பட்டதா? என்ற சலசலப்பு இருந்தாலும், சிங்கப்பூர் முழுவதும் இந்த சிறப்பு பீர் பற்றிய பேச்சுதான் அடிபடுகிறது. இந்த பீர் மிகவும் சுவையாக இருப்பதாக கூறப் படுகிறது. இந்த பீருக்கு தற்போது மதுபிரியர்கள் மத்தியில் எதிர்பார்த்ததை விட, அதிகளவில் வரவேற்பு கிடைத்து வருவதாக கூறப்படுகிறது.

இது மறுசுழற்சியின் முக்கியத்துவத்தை ஊக்குவிக்கும் முயற்சியாகும். நாட்டில் தண்ணீர் பற்றாக்குறை அதிகரிக்கத் தொடங்கியதால், கழிவுநீரை சுத்திகரித்து குடிநீராக மாற்றும் நீர் மறுசுழற்சி தொழில்நுட்பத்தை அரசு செயல்படுத்த தொடங்கி உள்ளது. முதலில் கழிவு நீர் கிருமி நீக்கம் செய்யப்பட்டு, புற ஊதாக் கதிர்களால் சுத்திகரிக்கப்படுகிறது.

மேலும் அது குடிநீராக மாறுவதற்கு முன்பு பல்வேறு சுத்திகரிப்பு நிலைகளில் அனுப்பப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு, அதன்பிறகே பயன்பாட்டிற்கு வருகிறது.



# முதலையை திருமணம் செய்துகொண்ட மேயர்

மெக்சிகோவில் நகரம் ஒன்றின் மேஜர் ஒருவர் முதலையைத் திருமணம் செய்துகொண்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில், நாட்டின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள சிறிய நகரம் சான் பெட்ரோ ஹுவமெலுலா. இந்த நகரின் மேயராக இருந்து வருபவர் விக்டர் ஹ்யூகோ சோசா. இவர் தனது நகரம் இயற்கை வளத்துடன் செழிப்பாக இருக்க வேண்டி பழங்கால சடங்கின்படி பெண் முதலை ஒன்றை திருமணம் செய்தார்.

ஊர் பொதுமக்கள் திரளாக கலந்துகொள்ள பாரம்பரிய இசை முழங்க வண்ணமயமாக திருமண விழா நடந்தது. கிறிஸ்துவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தில் முதலைக்கு வெள்ளை நிற கவுன் அணிவிக்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு காரணங்களுக்காக பெண் முதலையின் வாய் கட்டப்பட்டிருந்தது. திருமணம் முடிந்ததை குறிக்கும் விதமாக மேயர் விக்டர் முதலையின் உதட்டில் முத்தமிட்டார். திருமணம் குறித்து மேயர் விக்டர் கூறும்போது, இயற்கையிடம் மழை, உணவு, மீன் வளம் வேண்டி நாங்கள் இந்த பிரார்த்தனையை செய்கிறோம். இது எங்கள் நம்பிக்கை என்றார். இந்த சடங்கு திருமணம் பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய ஹிஸ்பானிக் காலத்தைச் சேர்ந்த ஒக்ஸாகா மற்றும் ஹுவேவ் பழங்குடி சமூகங்களில் பின்பற்றப்பட்டு வந்தது என்பதும் இயற்கையின் கருணையை வேண்டி இம்மாதிரியான சடங்குகள் பழங்குடியினரால் பின்பற்றப்படுகிறமை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடை

## நோர்வே, டென்மார்க் வரவேற்பு



ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருள்களுக்கு ஜூலை 1ம் திகதி முதல் நோர்வே முழுவதும் தடை விதிக்கப்பட்டது. 100 மைக்ரோனுக்கு குறைவான பி.வி.சி. அல்லது பிளாஸ்டிக் கேரிபேக்குகளுக்குத் தடை விதிக்கப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கும், கடற்சார் பகுதிகளுக்கும் தீங்கு விளைவிக்கும் ஒருமுறை பயன் படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களை தயாரித்தல், விற்பனைசெய்தல், சேமித்து வைத்தல் போன்றவை ஜூலை 1ம் திகதி முதல் தண்டனைக்குரிய குற்றமாகும்

மேலும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களை விற்பனையை மற்றும் பயன்பாட்டை தடுக்க மாநில எல்லைகளில் சோதனைச்சாவடிகளை அமைத்து தடை செய்யப்பட்ட பொருள்கள் மாநிலங்களுக்கு இடையே எடுத்துச் செல்வதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், மத்திய அரசின் இந்த அறிவிப்பை நோர்வே அரசு பாராட்டு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பேசிய நோர்வே தூதர் (பொறுப்பு) மார்ட்டின் ஆம்டால் போத்தேம் கூறுகையில், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தத்தக்க பிளாஸ்டிக்கை தடை செய்த இந்திய அரசின் நடவடிக்கையை நோர்வே வரவேற்கிறது.

இந்த முக்கியமான நடவடிக்கையை எடுத்த பிரதமர் மோடிக்கு பாராட்டுக்கள். எங்கள் தூதரக வளாகத்தில் இந்த பிளாஸ்டிக் தடை நடவடிக்கையை மிகத் தீவிரமாக கடைப்பிடிப்போம்.

நோர்வேயில் கடந்த ஆண்டே பிளாஸ்டிக் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுவிட்டது. இந்தியாவில் உள்ள நகராட்சிகளுடன் பிளாஸ்டிக் குப்பைகளை எப்படி கையாள்வது என்பதை பகிர்ந்து கொண்டோம் என தெரிவித்தார்.

# பிளாஸ்டிக்கை ஒழிக்க முதலமைச்சர் எடுத்துள்ள மிகப்பெரிய முயற்சி மீண்டும் மஞ்சப்பை திட்டம்

## அமைச்சர் மா.சுப்ரமணியன் பேச்சு




மீண்டும் மஞ்சப்பை நோக்கி பின் சென்றாலும், வாழ்க்கையில் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என அமைச்சர் மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார். உலக பிளாஸ்டிக் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் பின்னோக்கி ஓடும் ஓட்டம் நிகழ்வு நடைபெற்றது. இதில், அமைச்சர் மா.சுப்ரமணியன் கலந்து கொண்டு நிகழ்ச்சியைத் துவங்கி வைத்தார். சுமார் 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் இதில் பங்கேற்றனர்.

முன்னதாக மேடையில் பேசிய அமைச்சர் மா.சுப்ரமணியன், வாழ்க்கையில் முன்னோக்கி செல்ல வேண்டும் என்பது நீதி என்றாலும் பின்னோக்கி பார்க்க வேண்டும் என முன்னோர்கள் கூறுவார்கள், அதுபோல பழமைகளை மறந்து விடாமல் புதுமைகளை மட்டும் பயன்படுத்தாமல் பழமைகளையும் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவும், பிளாஸ்டிக் எந்த அளவுக்கு அழிவை ஏற்படுத்தக் கூடியது என்பதை உணரவும் பிளாஸ்டிக் தடுப்பதற்கான விழிப்புணர்வு உலகம் முழுவதும் நடைபெற்று வருகிறது எனக் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், பிளாஸ்டிக்கை ஒழிக்கத் தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்துள்ள மிகப்பெரிய முயற்சி தான், மீண்டும் மஞ்சப்பை திட்டம். பழமையான விடயங்கள் மிகவும் பலன் தரக்கூடிய ஒன்று என்பார்கள், அப்படி, வீட்டிற்கு முன் சாணி தெளித்து அரிசி மாவில் கோளம் போடுவார்கள். சாணி தெளிப்பதன் மூலம் சாணத்தில் இருக்கிற வேதிப்பொருள் வீடுகளுக்குள் புழு பூச்சிகளை அண்ட விடாது சாணம் தெளித்தல் என்பது ஒரு மரபாக இருந்து வந்தது அரிசி மாவில் கோலமிடுவது அழகும் இருக்கும் எறும்பு போன்றவற்றுக்குத் தீனியாகவும் இருக்கும்.

இன்றைக்குக் கடையில் சாணி பவுடர் வாங்கி வைத்துக் கொள்கிறார்கள் சாணி பவுடர் தெளிப்பதனால் ஏற்படும் பிரச்சினை மிகவும் அதிர்ச்சியளிக்கக்கூடிய நிகழ்வாக இருந்து வருகிறது. பெரும்பாலும் தற்கொலை முயற்சிக்கான மூலப்பொருளாக அது மாறிவிட்டது எனக் கூறினார். தொடர்ந்து பேசிய அவர், பின்னால் நடப்பதை இன்றுடன் விட்டுவிட்டு வாழ்க்கையில் முன்னோக்கி நடப்பதற்கான பணிகளை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# உதய்பூரில் தையல் தொழிலாளி படுகொலை; மும்பை தீவிரவாத தாக்குதலுக்கும் தொடர்பு

உதய்பூரில் தையல் தொழிலாளி படுகொலை செய்யப்பட்டதற்கும் மும்பை தீவிரவாத தாக்குதலுக்கும் தொடர்பு இருக்கும் திடுக்கிடும் தகவல் வெளியாகி உள்ளது. ராஜஸ்தான் மாநிலம், உதய்பூர் மாவட்டத்தில் உள்ள மால்டாஸ் பகுதியை சேர்ந்த கன்னையா லால் என்ற டெய்லர், நுபுர் சர்மா வின் சர்ச்சை கருத்துக்கு ஆதரவு தெரிவித்து சமூகவலை தளங்களில் பதிவு போட்டதால், கடந்த 28ம் திகதி அவரை 2 பேர் தலை துண்டித்து கொடூரமான முறையில் கொலை செய்தனர்.

இது தொடர்பாக பாகிஸ்தனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் தாவத்-இ-இஸ்லாமி என்ற தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய ரியாஸ் அக்தாரி, கோஸ் முகமது ஆகியோரை கைது செய்தனர். இருவரின் மீது உபா சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து என்.ஐ.ஏ. விசாரித்து வருகிறது.

இந்த நிலையில் ரியாஸ் அக்தாரி, தனது மோட்டார் சைக்கிளுக்கு 2611 என்ற பதிவெண்ணை பெற கூடுதல் பணம் கொடுத்தார் என்ற திடுக்கிடும் தகவல் வெளியாகி உள்ளது. மும்பை பயங்கரவாத தாக்குதல் நடைபெற்ற திகதியுடன் அதனை இணைத்து பார்த்த அதிகாரிகள் விசாரணையைமுடுக்கிவிட்டுள்ளனர். ரியாஸ் 2014ம் ஆண்டு நேபாளத்திற்கு சென்றதும் கண்டுபிடிக்கப்பட்டது. பாகிஸ்தானுக்கு அழைப்புகள் செய்ய அவரது தொலைபேசி பயன்படுத்தப்பட்டதும் தெரிய வந்துள்ளது.

# தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் தொடர்பாக வழிகாட்டுதல் செயல்முறைகளை வெளியிட்டது பள்ளிக்கல்வித்துறை




தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் தொடர்பாக திருந்திய வழிகாட்டுதல் செயல்முறைகள் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்ற இடைக்கால ஆணையின் அடைப்படையில் திருந்திய வழிகாட்டுதல்களை பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ளது.

அரசுப் பள்ளிகளில் இரண்டாம் நிலை மற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் 13,331 பேரை தலைமை ஆசிரியர் உள்ளிட்டோர் அடங்கிய பள்ளி நிர்வாக குழு மூலம் நியமிக்க பள்ளிக்கல்வித் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்நிலையில் இதில் முறைகேடுகள் நடக்கின்றன என தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் செய்ய இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில், தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் தொடர்பாக பள்ளிக்கல்வித்துறை திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், ஒரே இடத்திற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணபங்கள் வந்தால் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், இல்லம் தேடி கல்வித் திட்டத்தில் பயில்பவர்களுக்கும் வாய்ப்பு வழங்குவது, வகுப்பறையில் பாடம் நடத்த அறிவுறுத்தி அதன் அடிப்படையில் அவர்களின் திறனை அறிவது உள்ளிட்ட வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

# கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஏக்நாத் ஷிண்டே சிவசேனாவில் இருந்து நீக்கினர் உத்தவ் தாக்கரே



கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஏக்நாத் ஷிண்டேவை சிவசேனாவில் இருந்து நீக்கி அக்கட்சியின் தலைவர் உத்தவ் தாக்கரே அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார். மகாராஷ்டிராவில் சிவசேனா கட்சியின் மூத்த தலைவர் ஏக்நாத் ஷிண்டே 39 எம்.எல்.ஏக்களின் ஆதரவுடன் உத்தவ் தாக்கரேவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கினார். இதனால், உத்தவ் பெரும்பான்மை பலத்தை இழந்ததால், அவர் முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, பா.ஜ.கவுடன் கூட்டணி சேர்ந்து, மகாராஷ்டிரா மாநில முதல்வராக ஏக்நாத் ஷிண்டேவும், துணை முதல்வராக தேவேந்திர பட்னாவிசும் நேற்று முன்தினம் பதவியேற்றனர். இந்நிலையில், புதிய முதல்வர் ஷிண்டே தலைமையிலான அரசு மீது சட்டப்பேரவையில் நாளை மறுதினம் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த அம்மாநில ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். இதற்காக நாளை, நாளை மறுதினம் 2 நாள் சிறப்பு சட்டப்பேரவை கூட்டம் நடக்க உள்ளது.

நம்பிக்கை வாக்கெடுப்பு தொடர்பாக நேற்று பேட்டி அளித்த ஷிண்டே, தனக்கு 170 எம்.எல். ஏக்கள் ஆதரவு இருப்பதாக தெரிவித்தார். இந்த நிலையில் ஏக்நாத் ஷிண்டேவை அனைத்து கட்சிப் பதவிகளில் இருந்தும் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே அதிரடியாக நீக்கியுள்ளார். கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக ஷிண்டே நீக்கப்பட்டுள்ளார் என சிவசேனா தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஷிண்டேகட்சிஉறுப்பினர் பதவி யையும் கைவிட்டதால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.



# மணிப்பூர் நிலச்சரிவில் சிக்கிய குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபா நிதியுதவி

மணிப்பூர் நிலச்சரிவில் பலியானாவர்கள் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது. மேலும், மண்ணில் புதைந்த பிராந்திய வீரர்கள் உட்பட 43 பேரின் கதி பற்றி கவலை ஏற்பட்டுள்ளதால், அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. மணிப்பூரில் நோனி மாவட்டத்தில் துபுல் யார்டு அருகே ரயில்வே கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன. இதற்காக பிராந்திய ராணுவ வீரர்கள் அந்த பகுதியில் முகாம் அமைத்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த புதன் இரவு இங்கு பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், முகாம்களில் தூங்கிக் கொண்டிருந்த இருந்த பிராந்திய வீரர்கள், தொழிலாளர்கள் மண்ணில் புதைந்தனர். இவர்களை மீட்கும் பணியில் ராணுவம், அசாம் ரைபிள்ஸ் படை, மணிப்பூர் பிராந்திய வீரர்கள், தேசிய பேரிடர் மீட்பு படையினர், மாநில பேரிடர் மீட்பு குழுவினர் சம்பவ இடத்தில் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் வரையில் 7 வீரர்கள் உட்பட 8 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

நேற்று மேலும் 12 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதை அடுத்து, நிலச்சரிவில் இறந்தவர்கள் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது. எனவே, பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றது. உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்று அம்மாநில முதல்வர் அறிவித்துள்ளார்.






# சிறுபோக வேளாண்மைச் செய்கையின் அறுவடை விழா வாகனேரித் திட்டத்தில்

மட்டக்களப்பு வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக வேளாண்மையின் அறுவடை விழா நேற்று முன்தினம் 30 ஆம் திகதி காலை 10 மணிக்கு கிரான் தவணைக்கண்டத்தில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

வாகனேரி திட்ட முகாமைத்துவக்குழுவின் தலைவர் சி.புஸ்பாகரன் தலைமையில் நடைபெற்ற அறுவடை விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்து சிறப்பித்தார். மட்டக்களப்பு நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி.ந.நாகரெத்தினம், மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துள்ளனர். ஆலய வழிபாடுகளைத் தொடர்ந்து அறுவடை விழா இடம்பெற்றது. இந்நிகழ்வில் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிரான் தவணைக் கண்டத்தில் வேளாண்மை செய்துள்ள விவசாயிகள் உள்ளிட பலர் கலந்து கொண்டனர்.




# அபிவிருத்தி அலுவலர்களுக்கு உளவளத்துணை செயலமர்வு

(ஹஸ்பர்)

ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரச திணைக் களங்களில் இணைக்கப்பட்டுள்ள பல்நோக்கு செயலணி அபிவிருத்தி உதவியாளர்களுக்கான உளவளத்துணை தொடர்பான செயலமர்வு தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்ற இந்த செயலமர்வில் மன அழுத்தம், தற்போதைய நெருக்கடி நிலைமைகளின் போது வாழ்வாதாரத்தை மேற்கொள்ளுதல், உளச் சுகாதாரம் ஆகியன தொடர்பில் விழிப்புணர்வூட்டப்பட்டது

வளவாளராக உளவளத்துணை உத்தியோகத்தர் கொன்சலின் மாவளன் கலந்து கொண்டார்.

இதில் பிரதேச செயலக பல்நோக்கு அபிவிருத்தி செயலணியின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக ஏ.முஹ்சித், ஜே.பரீனா மற்றும் பல்நோக்கு செயலணி உதவியாளர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

# தேசிய உணவு உற்பத்தி நிலையமாக அரச வைத்தியசாலை போசனசாலை

## திருமலையில் முன்மாதிரி முயற்சி




(ஹஸ்பர்)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட போசனசாலை தேசிய உணவு உற்பத்தி நிலையமாக நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம வினால் திறந்து வைக்கப்பட்டது.

இது மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட 04 ஆவது தேசிய உணவு உற்பத்தி நிலையமாகும். இதற்கு முன்னர் கந்தளாய், கிண்ணியா, திரு கோணமலை ஆகிய பிரதேசங்களில் இவ்வு ணவகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தரமான, தூய்மையான உணவுகளை வைத்தியசாலைக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் இவ்வுணவகம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. உணவு செய்கை முறை தொடர்பில் இரண்டு வருடம் பயிற்சிகளை பெற்றவர்களே இதனை முன்னெடுத்து வருகின்றனர்.

புனர்நிர்மாண வேலைகளை இலங்கை இராணுவத்தின் 22 ஆவது படைப்பிரிவினர் மேற் கொண்டனர்.

இந்நிகழ்வில் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர், 22 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி, வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# தொலைபேசி ஊடாக தீர்வு பெற 'கோல்சென்டர்' முறை ஆரம்பம்

## ஓட்டமாவடியில் இயங்கத் தொடங்கியது

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

தொலைபேசி ஊடாக பொது மக்களது பிரச்சினைகள் அல்லது தேவைகள் சேகரிக்கப்பட்டு தீர்வு காணும் வகையில் 'கோல் சென்டர்' என அடையாளப்படுத்தப்படும் தகவல் தொடர்பாடல் நிலையம் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை கட்டடத்தில் தவிசாளரால் ஏ.எம். நௌபரினால் நேற்று முன் தினம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ராஜபக்ஷர்கள் மீது நம்பிக்கை கொண்ட மக்களை ஒருபோதும் கைவிடமாட்டோம்!

## சாகர காரியவசம் உத்தரவாதம்



ஸ்ரீ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கமாதற்போது ஆட்சியில் உள்ளது என்பது சந்தேகத்திற்குரியது.

ராஜபக்ஷர்கள் மீது நம்பிக்கை கொண்ட மக்களை ஒருபோதும் கைவிடப்போவதில்லை.

ராஜபக்ஷர்களால் பிரபல்யமடைந்த வர்களே அரசாங்கத்தை பலவீனப்படுத்தி முழு நாட்டையும் நெருக்கடிக்குள்ளாக்கினார்கள் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டு மக்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி மீது முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

இந்த நம்பிக்கையின் காரணமாகவே கூட்டணியில் எம்முடன் ஒன்றிணைந்த அரசியல் கட்சிகளுக்கு மக்கள் ஆதரவு வழங்கினார்கள்.

அதேபோல்பொதுஜனபெரமுனவின் உறுப்பினர்களுக்கும் ஆதரவு வழங்கினார்கள். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் பிரபல்யமடைந்தவர்கள் தற்போது துரதிஷ்டவசமாக அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாகசெயற்படுகின்றனர் எனக் குறிப்பிட்டு நாட்டை முழுமையாக நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளார்கள். தற்போது நாட்டில் அரசாங்கம் என்ப தொன்று உள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினரும், அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படுபவர்களும் அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

இந்த அரசாங்கம் பொதுஜன பெரமுன தலைமையிலானதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

நாட்டு மக்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கே ஆட்சியதிகாரத்தை வழங்கினார்கள். ஆகவே கையளிக்க முடியாத பொறுப்புக்கள் எமக்குள்ளன.

நாட்டு மக்கள் ராஜபக்ஷர்கள் மீது நம்பிக்கை கொண்டு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆகவே மக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பது எமது பொறுப்பாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்திய மக்களை பொதுஜன பெரமுன ஒருபோதும் கைவிடாது.

நாடு என்ற ரீதியில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல,

நாட்டு மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். குறுகிய நோக்கங்களைத் துறந்து சகல தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

சுற்றுலாத்துறைசேவைகைத்தொழில் நாளாந்தம் வீழ்ச்சியடைந்து செல்கிறது. சிறந்த சூழல் காணப்பட்டால் மாத்திரமே சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தருவார்கள். – என்றார்.

# திட்டமிட்டு எரிபொருளுக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விநியோகத்தைத் தனியார் மயப்படுத்த அரசு திட்டம்

## அசோக அபேசிங்க எம்.பி. குற்றச்சாட்டு



நாட்டில் திட்டமிட்டு எரிபொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, நீண்டகாலத்துக்கு மக்களை வரிசைகளில் காத்திருக்க வைத்து, எரிபொருள் விநியோகத்தை எந்தவொரு தனியார் நிறுவனத்திடமேனும் ஒப்படையுங்கள் என்று மக்களை அவர்களது வாயால் கூறவைப்பதே அரசாங்கத்தின் திட்டமாக இருக்கின்றது. அதன் மூலம் நாட்டின் முக்கிய வளங்களை தனியார் மயப்படுத்துவதற்கே அரசாங்கம் முயற்சித்துவருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

அரசாங்கத்தின் செயற்பாடுகளின் காரணமாகத் தற்போது நாடு பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருப்பதுடன், படுகுழிக்குள் விழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எமது நாட்டின் உணவுப்பாதுகாப்பு மட்டம் முற்றாக இல்லாமல் செய்யப்பட்டு, அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ரணில் – ராஜபக்ஷ அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான உதவிகளை சர்வதேச நாடுகளிடம் கோரியிருப்பதாகக் கூறி அந்நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, அந்தப் படத்தை வெளியிடுகின்றார்கள்.

அதன்மூலம் பட அரசியல் முறையொன்றைக் கட்டியெழுப்பியிருக்கின்றார்கள். ஆனால் இன்னமும் பொருளாதார நிலை வரத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

நாட்டுக்கு அடுத்த எரிபொருள் கப்பல் எதிர்வரும் 22 ஆம் திகதியின் பின்னரே வரும் என்று சாகல ரத்நாயக்க கூறுகின்றார்.

எனவே அதுவரையில் எரிபொருளின்றி பொதுமக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையேற்படும்.

இதனைப் பயன்படுத்தி எரிபொருள் விநியோகத்தைத் தனியார்மயப்படுத்துவதே அரசாங்கத்தின் திட்டமாக இருக்கின்றது.

# ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு ஒகஸ்ட் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



இஸ்லாம் ஒரு புற்று நோய் என ஞானசார தேரர் வெளியிட்ட கருத்துக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் ஒகஸ்ட் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி வழக்கின் சாட்சி விசாரணைகளும், அந்த வழக்கில் பகிரங்க மன்னிப்பு கோர ஞானசார தேரர் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் பரிசீலனை செய்யப்படவிருந்தது.

இந்த நிலையிலேயே நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு, நீதிச் சேவைகள் ஆணைக் குழுவால் கடந்த 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்று நிருபத்துக்கு அமைய இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே எதிர் வரும் ஒகஸ்ட் 26 வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் பொரளை ஜும் ஆ பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர் ரிகாஸ் ஹாஜியார் முன் வைத்த முறைப்பாட்டுக்கு அமைய, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் மேலதிக நீதிவான் (3 ஆம் இலக்க அறை) முன்னிலையில் ஞானசார தேரருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் கடந்த ஜூன் 8 ஆம் திகதி சாட்சி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி முறைப்பாட்டாளர் தரப்பின் முதல் சாட்சியாளர் நீதிமன்றில் சாட்சியமளித்துள்ளார்.

இவ்வாறான நிலையில், குறித்த வழக்கை சுமுகமாக முடித்துக்கொள்ளும் நோக்கில் தனது சேவை பெறுநர் நீதிமன்றில் பகிரங்க மன்னிப்பு கோரத் தயாராக இருக்கிறார் என ஞானசார தேரரின் சட்டத்தரணிகள் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

இந் நிலையில் இது தொடர்பான விவகார வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை மீள விசாரணைக்கு எடுக்கப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் முறைகேடுகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை!

பெற்றோல் நிலையங்களுக்கு அருகில் முறைகேடுகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபரால் பொலிஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் கடமையில் இருக்கும் குறிப்பிட்ட சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கடமையில் இல்லாத சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகின்றனர் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

சில பொலிஸ் அதிகாரிகள் மக்களிடம் பணம் பெற்றுக்கொண்டு எரிபொருளை இலகுவாக பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்கின்றனர் எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், எரிபொருளைச் சேகரித்து சிலர் அதனை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர் எனவும், அதனை விற்பனை செய்யும் குறிப்பிட்ட நபர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு உதவி செய்கின்றனர் எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன என பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு எளிதில் எரிபொருளை பெற்றுக்கொள்ள அனுமதிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் தனது சுற்றறிக்கையில் பணிப்புரை விடுத்துள்ளார். மேலும், தற்போதுள்ள சட்டத்தின்படி, அத்தகைய பொலிஸ் அதிகாரிகளை இடைநீக்கம் செய்து, ஊழல் மற்றும் பிற குற்றங்கள் போன்ற ஒழுங்கு முறை குற்றங்கள் குறித்து முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறான அதிகாரிகள் தொடர்பில் புலனாய்வுப்பிரிவினரிடம்அறிக்கைகளை கோருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் உரிய சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய இவ்வாறான முறைகேடுகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்காத பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.07.2022இல் வெளியிடப்பெற்றது.